II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**MCOP. No. 180 of 2021**

Deposition of witness for the Petitioner / PW 2
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 19.09.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : Akash | Caste | : |
| Father's / Husband's Name | : | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி=

கெவின்ராஜிற்கு எங்கள் நிறுவனத்தில் இருந்து அவர் இறந்ததற்காக தொகை எதுவும் வழங்கப்படவில்லை. அவருடைய குடும்பத்தார் ஆவணங்களை இன்னும் கொடுக்கவில்லை. அவருக்கு கொடுக்கவேண்டிய பண பலன்கள் குறித்த கணக்கீட்டு அறிக்கையை இன்று கொண்டுவந்துள்ளேன். அது ம.சா.ஆ.15 ஆகும். ஒரு தொழிலாளி இறந்துவிட்டால் அவருடைய அடிப்படை சம்பளத்தை கணக்கிட்டு தான் எவ்வளவு பண பலன் வழங்கவேண்டும் என்று முடிவு செய்யப்படும் என்றால் சரிதான். ம.சா.ஆ.15 ஆனது 29.02.2020 தேதியிட்டதாகும். அது முடிவான தொகை அல்ல. அவரது விடுப்புக்கான சம்பளம் கழிக்கப்பட்டு பிறகு தான் அது வழங்கப்படும். ம.சா.ஆ.15 ல் அடிப்படை சம்பளம் குறிப்பிடப்படவில்லை. ம.சா.ஆ.15 ல் விடுப்பிற்கான சம்பளமும் வீட்டுவாடகைப்படியும் கழிக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.15 தவிர அவருக்கு கொடுக்கவேண்டிய வேறு தொகை எதுவும் இல்லை.

மறுவிசாரணை இல்லை.